# மட்டக்களப்பில் இந்துக்கல்விப் பாரம்பரியம் - ஓர் ஆய்வு

**N.Vaman**

Department of Hindu Civilization, Eastern University, Sri Lanka.
vamannagaiah@gmail.com

**ABSTRACT:** இலங்கையில் இந்துக் கல்விப்பாரம்பரியம் நீண்டகால வரலாற்றைக் கொண்டது. குறிப்பாக மட்டக்களப்பில் நீண்ட காலமாக இந்து சமயம் நிலைபெற்று வருவதோடு இந்துக் கல்வியும் அதனோடு இணைந்து வளர்ச்சிபெற்றே வந்துள்ளது. எனினும் ஆரம்பகால இந்துக் கல்விமுறை தொடர்பாக அறிந்து கொள்வதற்கான போதிய ஆவணங்கள் கிடைக்காமை எமது துரதிஷ்டமேயாகும். இலக்கியங்களின் துணைக்கொண்டு ஆராய்கின்றபோது புராதன இந்துக்கல்வி முறையின் எச்சங்களாக திண்ணைப்பள்ளிக் கல்வி மட்டக்களப்பில் இருந்துள்ளமை தெரியவருகின்றது. இத்திண்ணைப்பள்ளிக் கல்வி முதலாக இன்று வரை இந்துக் கல்வி முறை எவ்வாறு வளர்ச்சிபெற்று வந்துள்ளது என்பதை ஆராய்வதாகவே இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

## 1. திண்ணைப்பள்ளிக் கல்வி

மட்டக்களப்பில் நிறுவனமயப்பட்ட அமைப்பாக சைவப்பாடசாலைகள் தோற்றம்பெறுவதற்கு முன் நிலவிய பாரம்பரியக் கல்வி முறையாக திண்ணைப்பள்ளிக் கல்வி இருந்துள்ளது. மொழி, சமயம், அறம் சார்ந்த அடிப்படை விடயங்களுக்கு இக்கல்வி முறையில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. திண்ணைப்பள்ளி தொடர்பாக அறிந்து கொள்வதற்குரிய முக்கிய ஆவணமாக அக்காலத்தில் பாடப்பட்ட **"எண்ணெய்ச்சிந்து"** விளங்குகின்றது. மட்டக்களப்பின் பாரம்பரியக் கல்வி முறை குறித்த ஆய்வினை மேற்கொண்ட பேராசிரியர் செ. யோகராசா கிடைக்கின்ற ஆதாரங்களின் அடிப்படையில் இவ் எண்ணெய்ச்சிந்து பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்ககாலப் பகுதியிலிருந்து பாடப்பட்டு வந்திருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றார் (யோகராசா, செ., 2004, ப.02).

ஆனைமுகனே அரனார் திருமகனே எனவரும் பிள்ளையார் காப்போடு தொடங்கும் இப்பாடல் விநாயகர், சிவன், பார்வதி, முருகன், சரஸ்வதி ஆகிய தெய்வங்களைத் துதி செய்த பின்னர் ஏடு தவறாமல் எழுத்தாணி சாயாமல் கோடு தவறாமல் குற்றமொன்றும் வாராமல் எனத் தொடர்ந்து செல்லும்.

தமக்குக் கல்வி போதிக்கும் ஆசிரியருக்காக மாணவர்கள் வீடுதோறும் பொருள் சேகரிக்கச் செல்லும்போது இப்பாடலைப் பாடிச் செல்வது வழமையாக இருந்தது. இவ்வாறு சேகரிக்கும் பொருட்களுள் எண்ணெய் முக்கியம் பெற்றமையால் இப்பாடல் எண்ணெய்ச்சிந்து என அழைக்கப்பட்டுள்ளது. பின்னர் சைவப் பாடசாலைகளை நிறுவுவதற்குப் பணம் சேகரிப்பதற்காகவும் இப்பாடல் பாடப்பட்டு வந்துள்ளது. திண்ணைப்பள்ளிக் கல்வியில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்குவது வழமையானதாகவும், எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகவும் இருந்தது.

> **"ஆன சனிக்கிழமை யரிசியெண்ணெய் தண்டவந்தோம்**
> **சனியெண்ணெய்க் கென்றுவந்தோம் தாயே சலியாதே**
> **இனியெண்ணெய் இல்லையென் றேதும் உரையாதே**
> **வருத்திப் படிப்பித்த வாத்தியார் தன்கூலி**
> **பொருத்த முடனளித்தாற் புண்ணியமுண்டுங்களுக்கு..."** (எண்ணெய்ச்சிந்து, 1983, ப.10 )

திண்ணைப் பள்ளிக்கூடம் பெரும்பாலும் ஆசிரியரின் வீட்டிலேதான் நடைபெறும். ஆசிரியர் தனியாக அமைந்த திண்ணையில் மான்தோலில் அல்லது பலகையில் அல்லது பாயில் அமர்ந்திருப்பார். சுற்றிவர உள்ள திண்ணையில் மாணவர்கள் அமர்வதற்குப் பாய் போடப்பட்டிருக்கும். செல்வந்தர், ஏழை என்ற பாகுபாடின்றி அனைத்து மக்களுக்கும் கல்வி வழங்கப்பட்டது. அக்காலச் சமூக அமைப்பில் பெண்கல்வி முக்கியம் பெற்றிருக்கவில்லை. திண்ணைப்பள்ளிகளில் ஆண்பிள்ளைகளுக்கே கல்வி போதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஐந்து வயது முதல் மாணவர்கள் தம் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவர். முறைப்படி ஏடு தொடக்கப்பட்ட சடங்காசாரத்துடனேயே கல்வி ஆரம்பிக்கப்பட்டது. ஏடு தொடங்க முன்னர் விநாயகர், சரஸ்வதி போன்ற தெய்வங்களை வழிபட்டுக்கொள்வர். மாணவர்களுக்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, நன்னெறி முதலான நீதி நூல்களும் நிகண்டுகளும் கற்பிக்கப்பட்டதுடன், கணித பாடத்திற்கும் முதன்மையளிக்கப்பட்டது. பள்ளியில் பாடங்களை ஒழுங்காகக் கற்காது விட்டால் அல்லது ஒழுங்கீனமாக நடந்துகொண்டால் பிரம்படி, சவுக்கடி, முசுறுகளைக் கடிக்கச் செய்தல், வீட்டுக்கு அனுப்பாது விடல், சூரிய ஒளியைப் பார்த்த வண்ணம் ஒற்றைக்காலில் நிற்கச் செய்தல் முதலான தண்டனைகள் வழங்கப்பட்டன. இதனால் மாணவர்கள் மிகுந்த பயத்துடனேயே கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர். ஆசிரியர்களின் சமூக அந்தஸ்து உயர்ந்ததாகவே காணப்பட்டது. மாணவர்கள் மட்டுமன்றிப் பெற்றோரும் மதித்தே வந்துள்ளனர்.

இக்கல்வி முறையின் அவசியத்தினை எண்ணெய்ச்சிந்து எதிர்மறையான விதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறது;

> **“வேலிக்கு முள்ளுவெட்டி வீணாய்ப் போகாமல்**
> **கள்வனாய்ப் போகாமல் காவாலியாகாமல்**
> **சுள்ளி விறகெடுத்துச் சுமைதலைமேல் வையாமல்**
> **ஆடுகள் மேய்த்து அலைந்து திரியாமல்**
> **மாடுகள் மேய்த்து மடையனாய்ப் போகாமல்**
> **சூது விளையாடிச் சுகமிழந்து போகாமல்**
> **மாதர்பின்னே சென்று மயங்கித் திரியாமல்**
> **……………………………எங்களைநீர்**
> **பள்ளிக்கு வைத்து பலகலைகளோதுவிக்க..”** (எண்ணெய்ச்சிந்து, 1983, பக்.11-12 )

மட்டக்களப்பில் பிரித்தானியராட்சி நிலவிய காலப்பகுதியிலும் மண்டூர், வெல்லாவெளி, கோயில் போரதீவு முதலான படுவான்கரைப் பிரதேசங்களில் இத்திண்ணைப்பள்ளிகள் இயங்கி வந்துள்ளன. கிறிஷ்தவமிஷனறி ஊடாக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டபோது அதனை இப்பகுதிப் போடிகளும் கிராம மக்களும் முழுமூச்சாக எதிர்த்திருக்கின்றார்கள். அப்பாடசாலைகளுக்கூடாக மதம் பரப்ப முனைந்தோரை மிகக் கண்ணியக் குறைவாக நடாத்தியிருக்கிறார்கள் (வெல்லவூர்க்கோபால், 2012, பக். 56-57).

## 2. மரபுசார் அறிவியற் கல்வி

மாந்திரீகம், வைத்தியம், சோதிடம் ஆகிய மரபுசார் அறிவியற் கல்வி முறையும் ஆரம்ப காலத்தில் மட்டக்களப்பில் இருந்துள்ளது. இக்கல்வி முறை எப்பொழுது ஆரம்பமானது என்பது தொடர்பாகத் திட்டவட்டமாகக் கூற முடியவில்லை. இக்கல்வி குரு-சீட பரம்பரையில் இரகசிய முறையிலேயே போதிக்கப்பட்டு வந்துள்ளது. கல்வி போதிக்கும் ஆசிரியரின் மகனே பெரும்பாலும் சீடனாக அமைந்திருத்தலும் குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் இக்கல்வி முறையானது அனைத்துப் பிரிவினரையும் சென்றடையவில்லை என்பது

தெரிய வருகின்றது. தொழில்சார் விடயங்கள் யாவும் ஏடுகளிலேயே எழுதப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன.

பழம்பெரும் கலைகளுள் தனிச்சிறப்பு வாய்ந்ததும் மனித வாழ்க்கைக்கு மிக இன்றியமையாததுமாக மந்திரக்கலை விளங்கியது. மலையாள மந்திரங்களின் தாக்கம் மட்டக்களப்பில் இருப்பதனால் அங்கிருந்து இம்மந்திரங்கள் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. இம்மந்திரங்கள் நன்மைபயக்கும் மந்திரங்கள், தீமைபயக்கும் மந்திரங்கள் என இரண்டு வகைகளில் பயன்படுத்தப்பட்டது. மந்திர வித்தைகளைக் கையாள்பவர்களைப் ‘பூசாரிகள்’ என்று அழைத்தனர். கோயிற் சடங்கு, திருநீறு போடுதல், அட்சரம் கட்டுதல், காவற் பண்ணுதல், பேயோட்டுதல், பைத்தியம் தீர்த்தல், குறிபார்த்தல் எனப் பலவற்றிற்கும் மந்திரம் பயன்பட்டது.

மிக நீண்ட காலமாக மருத்துவ ஏடுகள் (வாகடங்கள்) பல மட்டக்களப்பில் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளன. பரம்பரையாக வைத்தியம் பார்ப்போர் இவற்றைப் பாதுகாத்தனர். சித்த, ஆயுர்வேத வைத்திய முறை என அவை பெயர் பெற்றன. இவை மாத்திரமன்றி முறிவு வைத்தியம், கட்டு வைத்தியம், விஷ வைத்தியம் என்று பல்வேறு வைத்திய முறைகளும் இருந்துள்ளன. இன்றுவரை பயன்பாட்டில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சோதிடக்கலை தொடர்பான அறிவுடையோர் பலரும் இங்கு வாழ்ந்துள்ளனர். மக்கள் வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்த ஒன்றாக சோதிடம் இருந்துள்ளது. ஒரு குழந்தை பிறந்ததும் சாதகம் கணித்தல் முதலாக ஏடுதிறத்தல், திருமணம், தொழில் எனப் பல்வேறு விடயங்களிலும் சோதிடக்கலை தொடர்பான அறிவு பயன்பட்டுள்ளது.

## 3. சுதேச இயக்கமும் சைவப் பாடசாலைகளும்

ஐரோப்பியரின் ஆட்சியின் விளைவாக மட்டக்களப்பில் இயங்கிவந்த திண்ணைப் பள்ளிக்கூடங்கள் சுதந்திரம் இழந்தன. குறிப்பாகப் பிரித்தானியர் ஆட்சியில் கிறிஷ்தவ சமயத்தைப் பரப்பும் நோக்குடன் இங்கு வருகை தந்த மிஷனறிகள் தம் சமயப் பரப்புகைக்கான கருவியாக கல்வியைப் பயன்படுத்தின. 1814 ஆம் ஆண்டிலிருந்து மெதடிஸ்த திருச்சபைப் பாடசாலைகளும் 1854 ஆம் ஆண்டிலிருந்து கத்தோலிக்கத் திருச்சபைப் பாடசாலைகளும் மட்டக்களப்பு மாநிலம் எங்கும் தீவிரமாகத் தோன்றத் தொடங்கின. (வாமன்.நா., 2012, ப.295) இப்பாடசாலைகளில் கல்வி பயில்வதாயின் சைவர்கள் கிறிஸ்தவ சமயத்திற்கு மதம் மாற வேண்டும் என்ற சூழ்நிலை உருவானது. காலத்தின் தேவைக்கேற்ப நவீன கல்வியைப் பெறவும், ஆங்கிலம் கற்கவும் கிறிஸ்தவ மிஷனறிப் பாடசாலைகளை நாடுவது அவசியமாயிற்று.
கிறிஸ்தவ பாதிரிமார்களது இக்கொள்கை படித்த சைவ இளைஞர்கள் மத்தியில் சமய வெறுப்புணர்ச்சியை உண்டுபண்ணியது. இதனால் சுதேச உணர்வு கொண்டு இளைஞர்கள் எழுச்சியுறும் நிலை தோன்றிற்று. இதேவேளை, சுவாமி விவேகாநந்தரின் அமெரிக்க சிஷ்யைகளுள் ஒருவரான சகோதரி அவபாமியா அம்மையார் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்து கிராமங்கள் தோறும் இந்து சமயப் பிரச்சாரம் செய்தமையால் நாடெங்கிலும் ஓர் எழுச்சி உண்டாயிற்று. மேற்குறித்த இரு செயற்பாடுகளின் உந்துதலினால் தோன்றியதே மட்டக்களப்புச் சுதேச இயக்கமாகும். இவ்வியக்கத்திலே முதலியார் கா.வ. மார்க்கண்டன், குருநாதபிள்ளை கனகசபை, வித்துவான் ச.பூபாலபிள்ளை, பண்டிதர் சாமிநாத மயில்வாகனனார், வித்துவான் அ.சரவணமுத்தன், தேசிகமணி அருணாசலம், வித்துவான் வைத்திலிங்க தேசிகர், பொ.ஆறுமுகசாமி போன்றோருடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெரியோர் பலரும் பங்காளர்களாய் இருந்தனர். (மகேஸ்வரலிங்கம்.க., 2008, ப.209) சைவப்பாடசாலைகளை உருவாக்கி கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்தலே இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

இளம் வயதில் இச்சுதேச இயக்கத்தின் பங்காளராயிருந்த புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் அவ்வியக்கத்தின் பணிகள் குறித்து மேல்வருமாறு குறிப்பிடுவார்; ''சைவப் பிள்ளைகளெல்லோரும் சைவப் பள்ளிக்கூடத்திற் படிக்கவேண்டும். தேவையான பள்ளிக்கூடங்களை ஊரெங்கும் நாமே கட்டுவோம் என்று பெரியோரும் இளைஞர்களும் துள்ளியெழுந்து தமது தோள்களால் மரம் தடிகளைச் சுமக்கிறார்கள். கட்டடங்கள் எழும்புகின்றன. முந்தியே இவ்வியக்கத்தில் விடுமுறை காலங்களில் இடையிடையே கலந்து கொண்ட நான் இப்போது முழுநேரத் தொண்டனாகிவிட்டேன். எங்கள் நோக்கம் நல்ல நோக்கம். இதுவரையும் நமது காரியங்களை நமக்காகப் பிறர் செய்தது போதும். இனி நமது அலுவல்களை நாமே பார்ப்போம் என்பது தான் எங்கள் குறிக்கோள்'' (பெரியதம்பிப்பிள்ளை.ஏ., 1982, பக்.27-28 )

இக்காலப்பகுதியிலே சுவாமி விவேகாநந்தர் இலங்கையின் பல இடங்களிலும் நிகழ்த்திய சமயச் சொற்பொழிவுகளும் இப்பிரதேச மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தியது. இதன் பலனாக விவேகானந்த சபை உருவாக்கப்பட்டு அதன் பரிபாலனத்தின் கீழும் பல சைவப்பாடசாலைகள் தோற்றம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சுதேச இயக்கத்தின் கல்விப் பணிகளுக்கு இப்பகுதியில் வாழ்ந்த வசதிபடைத்த சமய அபிமானிகள் உதவ முன்வந்தனர். தர்மரெத்தினம் உடையார், வேலுப்பிள்ளை உடையார், கா.வ.மார்க்கண்டன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் இப்பாடசாலைகளை அமைப்பதற்காக நிலங்களை வழங்கியதுடன் பண உதவிகளையும் புரிந்துள்ளனர். புளியந்தீவு, ஆரப்பற்றை (ஆரையம்பதி), கல்லடி உப்போடை, காரைதீவு, மண்டூர், மொறக்கட்டாஞ்சேனை ஈச்சந்தீவு முதலான மட்டக்களப்புக் கிராமங்களில் சைவப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இச்சைவப் பாடசாலைகளில் கல்வி போதித்தவர்களுள் சைவப்புலவர்களான வித்துவான் அ.சரவணமுத்தன், வித்துவான் வைத்திலிங்க தேசிகர், தேசிகமணி அருணாசலம் போன்றவர்கள் முக்கியமானவர்கள்.

மட்டக்களப்பிற்கு வருகைதந்த இராமகிருஷ்ண மிஷன் துறவிகள் இங்குள்ள சைவப் பாடசாலைகளுக்கு விஜயம் செய்ததுடன் தங்களது கருத்துக்களைப் பதிவு செய்தும் வைத்துள்ளனர். 1918 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சுவாமி சர்வானந்தர் மட்டக்களப்பிற்கு வந்து இங்கு உத்வேகத்துடனும் அதேசமயத்தில் பல இன்னல்களுக்கிடையில் சமயப்பணி புரிந்துவந்த பாடசாலைகளையும் பொது மக்களையும் சந்தித்தார். ஆரப்பற்றை சைவப்பாடசாலையைப் பார்வையிட்ட பின் அப்பாடசாலை சம்பவக் குறிப்புப் புத்தகத்தில் பின்வருமாறு எழுதினார்;

''இக்கிராமத்தில் அமைந்துள்ள கல்விச்சாலையைப் பார்வையிட்டு மிக மகிழ்ந்தேன். இதனை அமைத்துப் பாதுகாப்பதில் இக்கிராம மக்கள் காட்டிய தீரம்மிக்க விடாமுயற்சியின் வரலாற்றினை நான் கேள்வியுற்றேன். இப்பாடசாலை மேலும் மேலும் வளர்ந்து சிறந்ததொரு கல்விச்சாலையாக அமைய பகவானின் ஆசி கிட்டுவதாக.'' (சிவசுப்ரமணியம், வ., 1993. ப.72)

இக்காலப்பகுதியில் ''மட்டக்களப்பு மக்கள் சைவப் பாடசாலைகளை அமைப்பதோடு நின்றுவிடவில்லை. ஆலயங்களில் சொற்பொழிவாளர்கள் சமயப் பிரசங்கங்கள் நிகழ்த்தினார்கள். சைவ நூல்நிலையங்களும் வாசிகசாலைகளும் திறக்கப்பட்டன. மட்டக்களப்பு நகரில் **சுத்தாத்வைத அச்சியந்திரசாலை** நிறுவப்பட்டிருந்தது. பெயரை நோக்கில் இது சைவப்பிரச்சார நோக்கில் அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இந்த அச்சியந்திரசாலையில்தான் மட்டக்களப்பு வித்துவான் ச.பூபாலபிள்ளை அவர்களின் 'தமிழ் வரலாறு' என்னும் நூல் சிறப்பான முறையில் 1920 இல் அச்சிடப்பட்டது.'' (சிவசுப்ரமணியம், வ., 1993. ப.73)

இவ்வாறு பல விதங்களிலும் சிறப்புற்றிருந்த மட்டக்களப்பு மக்கள் தோற்றுவித்த சைவப் பாடசாலைகள் ஏனைய மதஸ்தாபனங்களின் போட்டியை எதிர்த்து நிற்கவேண்டியிருந்தது.

மிஷனறிகள் இப்பாடசாலைகளின் செயற்பாடுகளை நிறுத்துவதற்குப் பல வழிகளிலும் முயன்றுள்ளன. இப்பாடசாலைகளின் நிருவாகிகள் தங்கள் சொந்தத் தொழிலைக் கவனிக்கவேண்டியிருந்ததால் பாடசாலைகளின் வளர்ச்சிக்குத் தமது முழுநேரப் பணியையும் செய்ய முடியவில்லை. போதுமான சிறந்த ஆசிரியர்கள் இல்லாமையும் ஒரு குறையாக இருந்தது. நிதி நிலமையும் போதுமானதாக இருக்கவில்லை. இவ்வாறு பாடசாலை நிருவாகம் மிகுந்த சிரமத்தின் மத்தியில் இயங்கிக்கொண்டிருக்கும் பொழுதே சுவாமி விபுலாநந்தர் இங்கு வந்தார். பிரதேச மக்கள் அடிகளாரின் மூலம் இராமகிருஷ்ண மிஷனிடம் பாடசாலைகளை ஒப்படைத்து விடுவதே சிறந்த வழி என்ற முடிவுக்கு வந்தனர்.

## 4. இராமகிருஷ்ண மிஷன் கல்விச் செயற்பாடுகள்

மட்டக்களப்பில் இராமகிருஷ்ண மிஷனின் நிறுவன ரீதியான பணிகள் 1925 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. இராமகிருஷ்ண மிஷன் தனது ஆரம்பப் பணியாக கல்விப் பணியை முன்னெடுத்துச் சென்றது. இப்பணியில் மிஷனின் கருவியாக சுவாமி விபுலாநந்தர் செயற்பட்டார். இராமகிருஷ்ண மிஷன் ஆரம்பித்த இப்பணிக்கு மட்டக்களப்பு நகரம், கல்லடி உப்போடை, காரைதீவு மற்றும் ஏனைய ஊர்களைச் சேர்ந்த சமயப் பற்றுடைய பெருமக்கள் உதவ முன்வந்தனர். மட்டக்களப்பு மக்களால் நடாத்தப்பட்டு வந்த சைவப் பாடசாலைகள் பொறுப்பேற்கப்பட்டதுடன் புதிய பாடசாலைகளை அமைக்கும் பணியும் முன்னெடுக்கப்பட்டது. 1925 இல் சிவானந்தா வித்தியாலயத்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. (மணி.பெ.சு., 1997, ப.217) சிவானந்தா வித்தியாலயம் மிக விரைவாக வளர்ந்து இலங்கையிலுள்ள சிறந்த பாடசாலைகளில் ஒன்றாகக் கணிக்கப்பட்டது. மட்டக்களப்பிலே இந்து சமய மரபில் தோற்றம் பெற்ற முதலாவது ஆங்கிலப் பாடசாலை இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது. (இராமகிருஷ்ணமிஷன் மாணவர் இல்ல பவளவிழா மலர், 2001, ப.26) சுவாமிகளின் விருப்பத்தை அனுசரித்து வசதி படைத்தவர்கள் பலர் புதிதாக வகுப்பறைகள், மண்டபங்கள், நூல்நிலையங்கள், ஆய்வுகூடங்கள் முதலியவற்றை அமைத்துக் கொடுத்து கல்வி வளர்ச்சிக்கு உதவினார்கள்.

கல்வியின் மூலமே சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என்பதில் சுவாமிகள் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். மண்டூர், களுதாவளை, ஈச்சந்தீவு, மொறக்கட்டாஞ்சேனை, சித்தாண்டி, ஆரையம்பதி, கல்முனை, காரைதீவு போன்ற பல பிரதேசங்களிலும் அவ்வப்பிரதேசத்தில் உள்ள பிரமுகர்களின் உதவியுடன் பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. அக்காலத்தில் அடிகளார் எதிர்நோக்கிய சிரமங்களை சுவாமிகளின் சமகாலத்தில் வாழ்ந்த மூதறிஞரும் இலக்கிய கலாநிதியுமாகிய வ. சிவசுப்ரமணியம் மேல்வருமாறு குறிப்பிடுவார்; “அவருக்கு எப்பொழுதும் பணத்தட்டுப்பாடு இருந்தது. அரசாங்கம் கொடுக்கும் உதவித் தொகை சொற்பமாக இருந்தது. ஆசிரியர்களுக்குக் கொடுக்கவேண்டிய சம்பளம் தவிர மிஞ்சுவது அற்பமே.” (சிவசுப்ரமணியம், வ., 1993. ப.157) இவற்றுக்கும் மேலாக பாடசாலைக்கு பிள்ளைகளைச் சேர்ப்பதிலும் அடிகள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கியமை தெரியவருகின்றது. வீடுவீடாகச் சென்று சைவப்பெற்றோர்களைச் சந்தித்து தமது பிள்ளைகளைச் சைவப் பாடசாலையில் சேர்ப்பிக்கும்படி ஆலோசனை வழங்கினார்.

பெண்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து பெண் பிள்ளைகளை உயர் கல்வி கற்கத் தூண்டி அவர்கள் உத்தியோகம் பெறச் செய்தவர் சுவாமி விபுலாநந்தர். பெண் குழந்தைகளுக்கென காரைதீவில் சாரதா இல்லத்தையும், மட்டக்களப்பில் ஆனைப்பந்திப் பெண்கள் வித்தியாலயத்தையும் உருவாக்கினார். வகுப்பறைக் கல்விக்கு மேலதிகமாக சமய அறிவையும் பண்பாட்டு விழிப்புணர்வையும் ஏற்படுத்தினார்.

இலங்கை அரசாங்கம் 1960 இல் பாடசாலைகளைப் பொறுப்பேற்றபோது 26 பாடசாலைகள் இராமகிருஷ்ணமிஷன் பராமரிப்பில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (பவளவிளா மலர், இராமகிருஷ்ணமிஷன், 2001, ப.26) பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதும் மிஷன் தனது பணிகளை வேறு வழியில் மாற்றிக்கொண்டது. அனாதைச் சிறுவர்களை பராமரிக்கும் நோக்கோடு இல்லங்களை நிறுவி பணியாற்றியது. இராமகிருஷ்ண மிஷனின் கீழ் மூன்று மாணவர் இல்லங்கள் நிர்மாணிக்கப்பட்டன. மட்டக்களப்பில் இரண்டு இல்லங்களும், காரைதீவில் ஒரு இல்லமும் உருவாக்கப்பட்டன.

மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் அமைந்துள்ள மாணவர் இல்லமானது முதன் முதலில் யாழ்ப்பாணம் வண்ணார்ப் பண்ணையில் உள்ள திரு.விஸ்வநாத உடையாரது வெள்ளிக்கிழமை மடத்தில் 1926 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. (பொன்விழா மலர், இராமகிருஷ்ணமிஷன், 1976, ப.28) 6 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இம் மாணவர் இல்லமானது காலத்தின் தேவை கருதி 1929 இல் மட்டக்களப்பு கல்லடி உப்போடைக்கு மாற்றப்பட்டது. சிவானந்த வித்தியாலயத்திலிருந்த ஒரு கட்டடத்தினுள் இம்மாணவர்கள் தங்கவைக்கப்பட்டனர். 1931 ஆம் ஆண்டு இவ்வில்லம் தனக்கென ஒரு சொந்தக் கட்டடத்தை அமைத்துக் கொண்டது. காலப்போக்கில் காரைதீவில் ஒரு மாணவியர் இல்லமும் (1937), மட்டக்களப்பில் ஒரு மாணவியர் இல்லமும் (1951) ஆரம்பிக்கப்பட்டன. (பவளவிளா மலர், இராமகிருஷ்ணமிஷன், 2001, ப.56)

குருகுலப் பாரம்பரியத்தை பின்பற்றியனவாக இல்ல நடவடிக்கைகள் அமைந்தன. இவ்வில்லத்தில் வசித்துவரும் மாணவர்களுக்கு உடல் உறுதி, உள உறுதி, ஆத்மீக உறுதி எனும் மூன்று அடிப்படையில் பயிற்சி அளிக்கப்பட்டன. பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக இல்லத்தில் மிஷன் துறவிகளாலும் வகுப்புக்கள் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கல்வி நடவடிக்கைகள் தவிர தோட்டவேலைகள், கைப்பணி வேலைகள், தையல் வேலைகள் (மாணவிகள் இதில் ஈடுபடுவர்) முதலியவற்றிலும் மாணவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இக்குருகுலப் பரிபாலனத்தில் பயிற்சிபெற்ற மாணவர்களிடையே தன்னம்பிக்கை, கருமங்களை நிறைவேற்றும் ஆற்றல், துணிவு, பிரச்சினைகளைத் தாமே தீர்க்கப்பழகுதல், உள்ளதைக் கொண்டு மனத்திருப்தியும் நிறைவும் பெறல், பிறர் உதவியின்றித் தாமே காரியங்களைச் செய்யப் பழகுதல் முதலான நற்பண்புகள் விருத்தி பெற்றன.

பாடசாலைகள், மாணவர் இல்லங்கள் என்பவற்றுக்கு அப்பால் இராமகிருஷ்ண மிஷன் ஆற்றிய கல்விப்பணிகளுள் புத்தகக்கண்காட்சிகள், சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், நூல்நிலைய சேவை முதலியனவும் குறிப்பிடத்தக்கவையாக விளங்கின.

## 5. அறநெறிப் பாடசாலைகளும் அதன் பணிகளும்

நீண்ட காலமாக மட்டக்களப்பில் இந்துக் கல்வியை வளர்த்துச் செல்வதில் அறநெறிப் பாடசாலைகளுக்கு முக்கிய பங்குண்டு. ஆரம்பத்தில் இவை ஞாயிறு பாடசாலை என்ற பெயரிலே தொடங்கி நடாத்தப்பட்டன. பின்னரே அறநெறிப் பாடசாலைகள் என்று பெயர் மாற்றம் பெற்றன. மட்டக்களப்புச் சுதேச இயக்கம், விவேகாநந்த சபை, இராமகிருஷ்ண மிஷன் என்பவற்றின் தோற்றத்தினைத் தொடர்ந்து இங்கு பல இந்து சமய நிறுவனங்கள் தோற்றம் பெற்றுள்ளன. கிராமங்கள் தோறும் இளைஞர் மன்றங்கள் உருவாக்கப்பட்டன. இந்நிறுவனங்களின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாக அறநெறிப் பாடசாலைகளை உருவாக்குதல் அமைந்திருந்தது.

மாணவர்கள் மத்தியில் ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றச் செய்தல், சமய வழிபாட்டு முறைகளை நெறிப்படுத்தல், அன்பு, பக்தி, பெரியோர்களை மதித்தல் போன்ற நற்பண்புகளை விதைத்தல், சமயமும் வாழ்க்கையும் இணைந்தது என்பதை நடைமுறைச்

செயன்முறைகள் மூலம் பிள்ளைகளுக்குப் போதித்தல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு இப்பாடசாலைகள் உருவாக்கப்பட்டன.

இப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் வேதனம் வாங்குவதில்லை, இதை ஒரு சேவையாகக் கருதியே செய்துவந்துள்ளனர். இந்து சமய விவகாரங்களுக்காக கொழும்பில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டதும் இவ் அறநெறிப் பாடசாலைகள் யாவும் பதிவுசெய்யப்பட்டு அதன் பரிபாலனத்தின் கீழ் இயங்கத் தொடங்கின. திணைக்களம் இவற்றைப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து ''ஆலயங்கள் தோறும் அறநெறிப் பாடசாலைகள்'' என்ற இலட்சிய நோக்கோடு 1989ம் ஆண்டு அறநெறிப் பாடசாலைச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. (கோபுரம், 2006, ப.66) இதன் பயனாகவும் பல பாடசாலைகள் தோற்றம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பின் நாவற்குடா என்னும் பகுதியில் இந்து கலாசார நிலையம் நிறுவப்பட்டு திணைக்களப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலைகளுக்கான உசாத்துணை நூல்கள், இசைக்கருவிகள், சீருடைகள் என்பன திணைக்களத்தினால் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும், ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்காக வருடந்தோறும் பண்ணிசை, சைவசித்தாந்த கருத்தரங்குகள் என்பன நடாத்தப்படுகின்றன. மாணவர்களுக்கு, பிரிவுப் பரிட்சைகள், இறுதிப் பரிட்சை என்பவற்றிற்கு மேலதிகமாகத் 'தர்மாசிரியர்' பரிட்சை என்பனவும் இடம்பெறுகின்றமை முக்கிய விடயமாகும்.

## 6. தொகுப்புரை

மேற்குறித்த விடயங்களைத் தொகுத்து நோக்கும் பொழுது; கிடைக்கின்ற இலக்கிய ஆதாரங்களின் அடிப்படையில் ஐரோப்பியர்கள் மட்டக்களப்பிற்கு வருமுன்பே இங்கு இந்து சமயம் சார்ந்த திண்ணைப்பள்ளிக் கல்வி, மாந்திரீகம், மருத்துவம், சோதிடம் தொடர்பான மரபுசார் அறிவியற் கல்வி என்பன இருந்துள்ளன. ஐரோப்பியர் காலத்தில் நிறுவனரீதியாக பாடசாலைகள் உருவாக்கப்பட்ட போது இங்குள்ள சுதேசிகளால் சைவப்பாடசாலைகள் அமைக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இப்பாடசாலைகளை நிருவகிப்பதில் இராமகிருஷ்ண மிஷன் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நல்கியுள்ளது. மேலும் இப்பகுதியில் தோற்றம் பெற்ற இந்துசமய நிறுவனங்களினால் குறிப்பாக இந்து இளைஞர் மன்றங்களினால் அறநெறிப்பாடசாலைகள் அமைக்கப்பட்டும் கல்வி போதிக்கப்பட்டு வந்துள்ளது. இவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது, நீண்ட காலமாக நிலைபெற்று வரும் மட்டக்களப்பு தேசத்து இந்துப் பாரம்பரியத்தில் இந்துக் கல்வி முறையும் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கி வளர்ச்சி பெற்று வந்துள்ளமை தெளிவாகின்றது.

## 7. உசாத்துணை நூல்கள்

'எண்ணெய்ச்சிந்து', (1983), இந்துசமய விருத்திச் சங்கம், மட்டக்களப்பு.

சிவசுப்பிரமணியம், வ., (1993), 'விபுலாநந்த தரிசனம்', சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை, மட்டக்களப்பு.

யோகராசா, செ., (கட்டுரையாசிரியர்), (2004), 'வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக', கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

பெரியதம்பிப்பிள்ளை.ஏ., (1982), ‘உள்ளதும் நல்லதும்’, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணி மன்றம், மட்டக்களப்பு.
கந்தையா, வீ. சீ., (2002), ‘மட்டக்களப்புத் தமிழகம்’, எக்ஸில், பிரான்ஸ்.

மகேஸ்வரலிங்கம், க., (2008), ‘மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும்’, தமிழ்ச்சங்கம், கொழும்பு.

மணி, பெ. சு., (1997), ‘இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்கம்’, இராமகிருஷ்ண மிஷன், கொழும்பு.

மௌனகுரு, சி., (பதிப்பாசிரியர்) ‘மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப்பண்பாடு’, (2003), இரண்டாம் உலக இந்துமாநாடு- மட்டக்களப்பு பிரதேசக் கிளை, மட்டக்களப்பு.

வெல்லவூர்க்கோபால், (2012), ‘வெல்லாவெளி வரலாறும் பண்பாடும்’, வெல்லாவெளி கலைமகள் மகா வித்யாலய பழைய மாணவர் மன்றம், மட்டக்களப்பு.

வாமன்.நா., (கட்டுரையாசிரியர்), (2012), ‘பிரித்தானியர் ஆட்சியும் நவீனமயமாக்கமும்’, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

‘பொன் விழா மலர்’, (2002), இந்து சமய விருத்திச் சங்கம், மட்டக்களப்பு.

‘கோபுரம்’, இருபதாண்டு நினைவுச் சிறப்பிதழ், (2006), இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

‘பொன் விழா மலர்’, (1976), இராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லம், மட்டக்களப்பு.

‘பவள விழா மலர்’, (2001), இராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லம், மட்டக்களப்பு.